உ
சிவமயம்



# புவனேஸ்வரி அம்மாள்
சுதுமலை.

அமரர்

# திருமதி .சுப்பிரமணியம் நாகப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்



02.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திருமதி. சுப்பிரமணியம் நாகப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

02.07.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பைச் சொரிந்து பண்பை வளர்த்த
எங்கள் குலவிளக்கே! உள்ளத்தின் ஒளி விளக்கே!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்!
வானுறையும் தெய்வத்துள் கலந்து கொண்டீர்!
மண்ணில் நல்ல வண்ணம்
நாம் வாழ வழி சமைத்தீர்!
எம்மைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு
எங்கோ சென்று விட்டீர்
அன்புருவே! பண்பின் சிகரமே!
எம் உள்ளத்தில் வாழும் குல விளக்கே!
உமது ஒளியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம்
இனி எமக்கு யார் தான் ஒளி தருவார்
உங்கள் நினைவு மலரைத் தங்களின்
பாதங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

*பிள்ளைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அமரர்

# திருமதி .சுப்பிரமணியம் நாகப்பிள்ளை

அவர்கள்



தோற்றம்
28 . 04 . 1935

மறைவு
02 . 06 . 2011

## திதி வெண்பா

கரவருடம் வைகாசி பிரதமை திதி
வியாழக்கிழமை நாகப்பிள்ளை–சீர்பெருகு
அம்மாளின் திருப்பாதம் சேருதற்கு எண்ணியே
புவனிதனை நீங்கியகன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக்காற்றைக்
கனகடலை குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலை புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்களுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குரு பர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து மூவர்க்குத் தமரரு மடிபேணக்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி விரவாகப்

பத்தற் கிரத்தை கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பஷத் தொடு ரஷத் தருள்வது மொருநாளே

தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழகொடு கழுதாடத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகு
சிதரப்பவிக்குத் தரிகடக முதுகூகை

கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

**வாழ்த்து**

வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சுப்பிரமணியம் நாகப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் எழில் முத்தெனத் திகழும் ஈழத் திருநாட்டில் சைவமும், தமிழும் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தின் வட பகுதியில் அமைந்துள்ள அழகிய கிராமம் ஆனைக்கோட்டையில் சிறப்புடன் வாழ்ந்து வந்த அம்பலவாணி பெரியபிள்ளை தம்பதிகளின் இல்லற வாழ்வின் பெரும் பேறாக நாகப்பிள்ளை, நடேசு, இரத்தினம், கனகசபை, மகேஸ்வரி ஆகிய ஐந்து பிள்ளைகளை பெற்றெடுத்தனர். இவர்களின் மூத்த புத்திரியாக அமரர் நாகப்பிள்ளை 28.04.1935 அன்று இப்பாரினில் பிறந்தார். இவரை பெற்றோரும், உறவினரும் அன்பாக "பொன்னு" என்று அன்பாக அழைத்தனர்.

இவரது திருமணக் கோலம் காண விரும்பி காங்கேசன் துறையில் மாண்புடன் வாழ்ந்து வந்த வைரவி நாகம்மா தம்பதிகளின் புத்திரரான சுப்பிரமணியம் 1948ம் ஆண்டு வாழ்க்கை துனைவராக கரம் பிடித்தார். இவர்கள் இனிதே இல்லறம் நடத்தியதன் பேறாக மகாலிங்கம், மகேந்திரன், மனோகரன், மகேஸ்வரன், குணராசா ஆகிய ஐந்து ஆண்பிள்ளைகளை பெற்றெடுத்தனர். தனது கணவன் இறந்ததினால் பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து பண்பாக வளர்த் தெடுத்து தனது கடமை பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு பண்பான குணங்கள் கொண்ட இந்திராதேவி, சாரதாதேவி, மகேஸ்வரி, விக்கினேஸ்வரி, நிறோஜினி ஆகிய மருமக்களை தேடிக் கொடுத்தார். இவ்வேளையில் தனது பிள்ளைகளுடன் தனது சகோதரர் களையும் தன் பிள்ளைகள் போல அரவணைத்து அன்புடன் அவர்களின் இல்லற வாழ்க்கையும் இனிதே நிறைவேற்றி வைத்தார். பின்னர் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002ம் ஆண்டு பிரான்சுக்கு சென்று அவரது மகன், மருமகள், பேரப் பிள்ளைகள், உறவினர்களை பார்த்து வந்தார்.

தனது பிள்ளைகளின் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் அன்பாகவும், அரவணைப்புடனும் வாழ்ந்து வந்த வேளையில் "விதி" என்பது வாழ்விற்கு விடை கொடுத்தது. 2011ம் ஆண்டு ஆனி மாதம் 02ம் திகதி வியாழக்கிழமை இரவு 7.00 (பிரதமை திதி) இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அம்மா அம்மா என்போம் அன்புடன் அன்று
ஆண்டவன் அழைப்பில் எம்மைவிட்டு சென்றீர் – இன்று
கலங்குகின்றோம் துடிக்கின்றோம் உங்கள் நினைவில்
கடல் கடந்து சென்று திரை சேர்க்க வைத்த – எமது
தாயே! கதறுகின்றோம், துடிக்கின்றோம் உங்கள் நினைவில்
எம்மை மணம் முடித்து வைத்தீர் மகிழ்ந்தீர் – ஆனால்
ஏங்குகின்றோம் உங்கள் இழப்பால்
பலகாலம் உங்களைப் பிரிந்தாலும்
பாசத்தால் நாம் பிரியவில்லை என்றும் நாம்
பேரப்பிள்ளைகளை, பூட்டப்பிள்ளைகளைக் கண்டீர்
பேரன்பு பெற்றீர், அழுகின்றோம் உங்கள் இழப்பால்
அன்பு என்றால் அது எங்கள் அம்மா என்றோம்
ஆனால் ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றீர்
அம்மா எம்மைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்கள் எம்மைவிட்டு ஏங்குகின்றோம்.

## சகோதரர்கள்

முட்கம்பி வேலிக்குள் புழுங்குகின்றோம்
முகம் புதைத்து உன்பிரிவால் வாடுகின்றோம்
நீ பிரிந்த அன்நாளில் உன்னருகில் நாங்கள் நின்றோம்
சகோதரியே! எங்கள் நிலையை – அக்கா
எவ்வாறு எடுத்துரைப்போம்

ஓர் தட்டில் நாமுண்ட உறவு எங்கே – அக்கா
ஒற்றுமையாய் நாம் வாழ்ந்த வாழ்வு எங்கே – அக்கா
நித்தமும் நாம் பார்த்த முகம் எங்கே அக்கா
பாரினிலே பல பேர்க்கும் இந்நிலைதான்
ஆதனால் உன்னுடைய ஆத்மாவை நேசிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

மாமி நீங்கள் எங்கள் மனம் நிறைந்த அன்புச் சொத்து
மருமக்கள் எங்கள் மீது மாறாத அன்பு வைத்து
புத்திமதிகள் பல கூறி பாசமழை பொழிந்தீர்கள்
துக்கமின்றி நாமிருக்க என்றும் துடிப்பாக கதை சொல்வீர்கள்
நேற்று வந்து பார்த்த இடமெல்லாம் இன்று
வெற்றிடமாய் போனது எங்கே சென்றீர்

பார்வையில் கனிவைக் காட்டி பண்புடனே
பாரினிலே நடக்க வைத்தீர்கள்
நிறைகுடமாக வஞ்சகமின்றி நடந்தீர்களே!
மருமக்கள் என்று வித்தியாசமின்றி மகள் போல் பார்த்தீர்கள்
எங்களை பிரிந்து எங்கு சென்றீர்கள்
ஏங்கித் தவிக்கின்றோம் உங்கள் முகம் காண!

## மச்சாள்மார் புலம்பல்

உன் கண்ணீர் வேதனை ரணங்களோடு
உன் மறு பிறப்புடனே நாம் பிறப்பெடுத்தோம்
இவ் உலகில் பாசக் கரம் கொண்டு
அள்ளி அணைத்தால் உயிர் கொடுத்தாய்
எமக்காய் உங்கள் கனவுகள் ஆசைகள்
துறந்து மறந்து அன்போடு வாழ்ந்தாய் மச்சாள்
துயரங்களில் தோள் கொடுத்தாய்
எம்மை அரவணைத்து அன்னையே
இன்று நாங்கள் உங்களை சுமந்திட ஏங்குகின்றோம்.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாசம் காட்டிய பக்குவமும் – அன்பு
கொண்ட உன் உள்ளமும்
உன் குழந்தை முகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையைப் போற்றும் பொறுமையும்
தட்டிக் கொடுத்த கைகளும்
பாதை காட்டிய உன் கால்களும்
இன்று நீ மறந்து தனித்து சென்றாலும்
நாம் இன்னும் மறக்கவில்லை
பொன் சொரிய வாய் திறந்து பேரர் என அழைக்கும்
புண்ணியவளே போனீரோ பொழுதும் வாருண்டதோ
இன்புடைய மெல்லொளியும் இள நகையும் பூமுகமும்
எங்கள் முன்னே நிற்காது எங்கே தான் சென்றதுவோ
நாம் விளங்க எமக்கெல்லாம் நல்வழி உரைத்தவரே
அப்பம்மா என்று நாம் எல்லாம் பரவசமாய் கூப்பிட்டோம்
இன்று அச்சொல்லை உச்சரித்து உருகியல்லோ நிற்கின்றோம் அப்பம்மா
உயிராய் எம்முன்னே வருவதினி எக்காலம் அப்பம்மா!

## உறவினர்கள் புலம்பல்

அம்மா என்று சொல்லி உரிமையுடன் கரம்
பற்றி பயமின்றி நின்றோமே – கூடி
வாழ்ந்த காலம் என்றும் பசுமை நிறைந்த நினைவுகள்
பேரானந்தமுடன் உம்மிடம் பசியாறினோம்
சொந்தங்கள் எல்லோரும் ஒன்றுசேர ஆசை கொண்ட
எங்கள் பொன்னுவே இன்று தொலைதூரம் சென்று விட்டீர்களே
தவிக்கின்றோம் நாம் ஒரு தரம் கனவில்
வந்தாவது கனிவோடு பேசினீர்களே
உரிமைமிக்க உறவினர்கள் எம்மைக் கண்டால்
உபசரித்து பரிவுடனே நலம் விசாரிப்பீர்
அயலார், சுற்றம் துடித்தால் ஓடி வந்து குறை தீர்த்திடுவீர்
கொடையினிற் சிறந்த வள்ளல் என்ற பேர் காத்து நின்றீர்
ஊருக்காய் வாழ்ந்த உத்தமியே பொன்னுவே இனி
இவ்வுலகில் யார் இருப்பார் உம்மைப்போல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தினங்கள்

| | |
|---|---|
| ஜனவரி – 26 | உலக சுங்கத்துறை நாள் |
| பெப்ரவரி – 22 | உலக சாரணர் தினம் |
| மார்ச் – 8 | உலக மகளிர் தினம் |
| மார்ச் – 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் – 21 | உலக வனதினம், உலக இன–பேத ஒழிப்பு நாள் |
| மார்ச் – 22 | உலக நீர் தினம் |
| மார்ச் – 23 | உலக வானிலை நாள் |
| ஏப்ரல் – 7 | உலக நலவாழ்வு தினம் |
| எப்ரல் – 18 | உலக மரபுரிமை தினம் |
| ஏப்ரல் – 22 | புவி நாள் |
| மே – 1 | உலகத் தொழிலாளர் தினம் |
| மே – 2 | உலகத் தாய்மார் தினம் |
| மே – 3 | பத்திரிகை சுதந்திர தினம் |
| மே – 8 | உலகச் செஞ்சிலுவை தினம் |
| மே – 15 | உலகக் குடும்ப நாள் |
| மே – 17 | உலகத் தொலைத்தொடர்பு தினம் |
| மே – 24 | பொதுநலவாய தினம் |
| மே – 31 | புகையிலை எதிர்ப்பு நாள் |
| ஜூன் – 4 | தாக்குதலுக்குப் பலியான உலகப் பச்சிளஞ்சிறார் தினம் |
| ஜூன் – 5 | உலகச் சுற்றுச்சூழல் தினம் |
| ஜூன் – 26 | உலக போதைப்பொருள் தடுப்பு தினம் |
| ஜூன் – 27 | உலக நீரிழிவு தினம் |
| ஜூலை – 6 | விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவக்கூடிய நோய்கள் தினம் |
| ஜூலை – 11 | உலக மக்கள் தொகை தினம் |
| ஆகஸ்ட் – 3 | உலக நட்பு தினம் |
| ஆகஸ்ட் – 6 | ஹிரோசிமா தினம் |
| செப்ரெம்பர் – 8 | உலக இலக்கிய தினம் |
| செப்ரெம்பர் – 16 | உலக ஓஸோன் தினம், உலக அமைதி தினம் |
| செப்ரெம்பர் – 26 | உலக செவிப்புலனற்றோர் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| செப்ரெம்பர் – 27 | உலகச் சுற்றுலா தினம் |
| ஒக்ரோபர் – 1 | உலக முதியோர் தினம் |
| ஒக்ரோபர் – 3 | உலக குடியிருப்பு தினம் |
| ஒக்ரோபர் – 4 | உலக விலங்கு நல தினம் |
| ஒக்ரோபர் – 6 | உலக ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் – 10 | உலக அஞ்சலக தினம், உலக முதலாளிகள் தினம் |
| ஒக்ரோபர் – 13 | உலக இயற்கை அழிவுக் குறைப்பு தினம் |
| ஒக்ரோபர் – 14 | உலகத்தர நிர்ணய தினம் |
| ஒக்ரோபர் – 15 | உலக வெள்ளைப்பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் – 16 | உலக உணவு தினம் |
| ஒக்ரோபர் – 24 | உலகச் சிக்கனநாள், ஐக்கியநாடுகள் தினம் |
| ஒக்ரோபர் – 30 | உலக வளர்ச்சித் தகவல் தினம் |
| நவம்பர் – 29 | உலக பாலஸ்தீனியர் ஒற்றுமை தினம் |
| டிசம்பர் – 1 | உலக எய்ட்ஸ் ஒழிப்பு தினம் |
| டிசம்பர் – 10 | உலக மனித உரிமைகள் தினம் |

## பொன் மொழிகள்

வாயில் வருவதையெல்லாம் கொட்டாதே
கொட்டிய பிறகு பொறுக்க இயலாது.

மற்றவனிற்கு நலமாயிரு நீ நலமாகுவாய்.

உன்னை தன்னைவிட உயர்த்துகின்றவன்
தான் உன் உண்மையான நண்பனாகுவான்.

பிறர் பேசியதை விட நீ பேசியதை
நினைவில் வைத்துக் கொள்.

நீ செய்ய இயலாவிட்டாலும் செய்தவற்றைப் பேணு.

நீ செய்வது உனக்குச் செய்யப்பட்டால்
என்று யோசித்த பிறகு செய்.

உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை
உபத்திரவம் கொடாதே.

உன்னுடையதை பொது வாக்கு
பொதுவானது உன்னுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனைகள்

1. நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகின்றாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப்போகும், நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்து விட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.

2. யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.

3. பேசாதவர்களிடம் சென்று பேசுங்கள். வராதவர்கள் வீட்டுக்குப் போங்கள், கோபித்தவர்களைச் சமாதானப்படுத்துங்கள். இவை எல்லாம் அவர்களுடைய நலனுக்காகவே செய்யவேண்டும் அவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று பாராதே.

4. சத்தியமே வெற்றி தரும். சத்தியத்தை ஏணியாக உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள்

5. நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்து போ, மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.

6. உண்மை சொல்லப் பழகிக்கொள்ளுங்கள். உறுதியை நெஞ்சில் தேக்கிக்கொள்ளுங்கள். திறமைகள் தான் அறிவு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

7. பிணி வருவதற்குமுன், மூப்பு உண்டாவதற்குமுன், புத்திமங்கி மறைவதற்கு முன், சாவு நெருங்குவதற்கு முன், உடல் நலத்துடன் இருக்கும் போதே செய்யவேண்டிய நல்ல நல்ல காரியங்களைச் செய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய், உழைப்பின் வடிவமாய், எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து, எம்மையெல்லாம் ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சிவபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

## சுப்பிரமணியம் நாகப்பிள்ளை

**அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, எமது இல்லத்திற்கு வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து எம் துயரில் பங்கு கொண்டோருக்கும், மலர்வளையம் வைத்தும், மலர்மாலை அணிவித்தும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், இறுதியாத்திரை, அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்ச்சிகளின் போது வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் இம்மலரைக் குறுகிய காலத்தில் தொகுத்து வழங்கிய மதி கலர்ஸ் நிறுவனத்திற்கும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இங்ஙனம்**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

வைரவி + நாகம்மா
↓
♦ வேலுப்பிள்ளை
♦ அருணாசலம்
♦ கந்தையா
♦ சுப்பிரமணியம்
♦ சின்னையா
♦ கந்தையா
ஆறுமுகம்

அம்பலவாணி + பெரியபிள்ளை
↓
நாகப்பிள்ளை ♦
நடேசு ♦
இரத்தினம் ♦
கனகசபை (குட்டி)
மகேஸ்வரி (ராணி)

சுப்பிரமணியம்
+
நாகப்பிள்ளை
↓

மகாலிங்கம்
+
இந்திராதேவி
↓
கலைச்செல்வி + உதயசந்திரன்
கலைச்செல்வன்
கலைமதி
கலைரூபி
கலைவாணி
வேனுசா

தட்சாயனன்
தர்மிலன்

மகேந்திரன்
+
சாரதாதேவி
↓
ரூபிகா
கபிலன்
கலாநிதன்

மனோகரன்
+
மகேஸ்வரி
↓
றமணன், மயூரன்
♦ றம்மியா, சௌமியா
சரணியா, அபிநயா


மகேஸ்வரன்
+
விக்கினேஸ்வரி
↓
பிரசாந்தன்
பிரியங்கி
சாயிதன்

குணராசா
+
நிறோஜினி

♦ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு : மதி கலர்
0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org